they w ll be called District Munsif-cum-Sub-Divisinal Magistrate Courts என்ற நிலை வரும். அந்த நிலை வரும்போது சோளிங்கர் பற்றியும் அரசு பரிசீலனை செய்யும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவரவர்களே, சிவில்-கம்—கிரிமினல் கோர்ட் வடாற்காடு மாவட்டத்தில் அமைக்கப்படுவதை வரவேற்கிறேன். ஏற்கனவே இருந்துவருகிற சிவில்-கம்-கிரிமினல் கோர்ட் வடாற்காடு மாவட்டத்திலிருந்து வேறு—இடத்திற்கு மாற்றப்படுவதாக ஒரு பீதி கிளப்பப்பட்டிருக்கிறது. ஏற்கனவே அமைச்சர் இல்லையென்று சொல்லியிருக்கிறார். மீண்டும் அந்த பீதி வந்திருக்கிறது. அது குறித்த விவரம் என்ன என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; பேரவைத் தலைவரவர்களே, ஆனால் அத்தகைய செயற் குறிப்பு எதும் இல்லை, அத்தகைய ஒரு கருத்தினை உயர்நீதிமன்றம் கூட அரசுக்குச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொள்ளாச்சியிலுள்ள கூடுதல் குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்றம்.

*வினா எண் 660—திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சியிலுள்ள அடிசனல் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் வாரத்தில் 3 நாள் கிரிமினல் வழக்கும், 3 நாள் சிவில் வழக்குகளும் நடத்தப்படுகிறத :

(ஆ) ஆம் எனில் அதனால் சிவில் வழக்குகள் காலதாமதம் ஆவதை அரசு அறியுமா ?

(இ) தாமதத்தைத் தவிர்க்க அங்கு தனியாக முன்சீப் கோர்ட் அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) பொள்ளாச்சியில் கூடுதல் குற்றவியல் முதல் வகுப்பு நீதிமன்றம் ஏதும் இல்லை. ஆனால் அங்குள்ள மாவட்ட முன்சீப் மற்றும் உட்கோட்ட குற்ற

வியல் நீதிமன்றத்தில் வாரத்தில் 3 நாட்களுக்கு குற்றவியல் வழக்குகளும் 3 நாட்களுக்கு சிவில் வழக்குகளும் நடைபெறுகின்றன.

(ஆ) ஆம்.

(இ) நீதிமன்றங்களின் அதிகார வரம்புக்குழு பரிவுரை செய்தவாறு தற்போது பொள்ளாச்சியிலுள்ள மாவட்ட முன்சீப் மற்றும் உட்கோட்ட மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்திலிருந்து குற்றவியல் வழக்குகளுக்கு தனியாக ஒரு உட்கோட்ட மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பை விரைவில் அனுப்புவதாக உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

திரு. எம். வி. இரத்தினம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொள்ளாச்சியில் உட்கோட்ட வழக்கு மன்றம் அமைக்கப்படும் என்று தெரிவித்தார்கள். மேற்படி வழக்கு மன்றம் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவிப்பார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரை வந்திருக்கின்றது. அரசு அதை ஆய்ந்து வருகின்றது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, பொள்ளாச்சியில் அடிஷனல் பர்ஸ்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஏராளமான வழக்குகள் தீர்க்கப்படாமல் இருப்பதால் அங்கே சிவில் கோர்ட்டு அமைப்பதற்கான செயற்குறிப்பு குறித்து விரைவில் நடவடிக்கை எடுத்து அதனைச் செயல்படுத்த வேண்டிய நடவடிக்கையை அமைச்சரவர்கள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னர் துணைக் கேள்வி கேட்ட உறுப்பினர் அவர்களும் இதைத்தான் கேட்டார்கள். சிவில் வழக்குகளும், கிரிமினல் வழக்குகளும் அங்கே அதிகமாக இருப்பதால் சிவில் வழக்குகளுக்கும், கிரிமினல் வழக்குகளுக்கும் தனித்தனியே ஒரு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை பற்றி உயர் நீதிமன்றம்கூட பரிந்துரை செய்திருக்கின்றது. அதைச் செயலாக்க இருக்கின்றோம். இருந்தாலும் கால தாமதம் ஆவதற்குக் காரணம் இன்டக்ரேஷன் ஆஃப் ஜுடிசியரி என்ற நோக்கமே ஆங்காங்கு சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளை ஒருங்கிணைந்து நடத்தக்கூடிய ஒரு அமைப்பு வரவேண்டும் என்பதுதான். அந்த ஒரு முடிவு இருந்து அதனை நடைமுறைப்படுத்த இருப்பதால் தான் இவ்வாறு தாமதம் ஏற்படுகின்றது. இருந்தாலும் இந்த நீதிமன்றம் பற்றி அங்கு அதிகமான வழக்குகள்

1981 ஏப்ரல் 24]

இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழுதடைந்த குடி தண்ணீர்க் குழாய்களை சீர் செய்தல்.

* வினா எண் 861-திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பழுதடைந்த குடிதண்ணீர் குழாய்களைச் சீர்செய்வதில் தாமதம் ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) தாமதத்தை தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) தெரியும்.

(ஆ) தாமதத்தை தவிர்க்க வேண்டி, கைப்பம்புகள் மற்றும் மின்விசைப் பம்புகள் பராமரிப்புக்காக ஒவ்வொரு ஒன்றியத்திலும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சீர் செய்ய நியமிக்கப்பட்டுள்ள பொருத்துனர்களைத் தவிர, இளநிலைப் பொறியாளர் மற்றும் அலுவலர்களைக் கொண்ட நடமாடும் பராமரிப்புக் குழு (Mobile Team) அமைக்கப்பட்டு, ஏற்படும் பழுதுகளை உடனுகுடன் சீர் செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. பழுது பார்ப்பதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மேலும் இதில் கவனம் செலுத்தப்படுகிறது.

திரு. தி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள குடிநீர் குழாய்கள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் போன்றவற்றை வாரியம் பராமரித்து வருகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியாக மெக்கானிக் நியமித்திருப்பதாகச் சொன்னார்கள். அவர்களால் பெரிய ரிப்பேர்களைச் செய்ய முடியவில்லை. காரணம், அவர்களிடம் அதற்கேற்ற சாதனங்கள் இல்லை என்று சொல்லப்